# அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முன்னேற்ற அறிக்கை

## 2016.01.01 – 2016.09.30

## உள்ளடக்கம்


| தொடர் இல | விடயம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| 01 | அறிமுகம் | 01 |
| 02 | ஆணைக்குழு கூட்டங்கள் | 01 |
| 03 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மென்மேலும் வினைத்திறனாக்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 02 |
| | • சேவைப் பெறுநர் பட்டயமொன்றை தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல் | 02 |
| | • இலக்கிடப்பட்ட தின முத்திரையை நடைமுறைப்படுத்தல் | 02 |
| | • மேலதிக செயலாளர்களின் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் | 02 |
| | • அமைச்சுக்களிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் தகவல் திரட்டும் மாதிரிப் படிவங்கள் | 03 |
| 04 | அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான கூட்டங்கள் | 03 |
| 05 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரிவுகளினது செயற்பாடுகள் | 05 |
| | • தாபனப் பிரிவு | 04 |
| | • நியமனப் பிரிவு | 07 |
| | • பதவி உயர்வுப் பிரிவு | 09 |
| | • ஒழுக்காற்றுப் பிரிவு | 10 |
| | • மேன்முறையீட்டுப் பிரிவு | 12 |


.

## 01. அறிமுகம்

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கு அமைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட புதிய அரசாங்க சேவை ஆணைக்குழு 2015.10.15 ஆம் திகதி தனது பணிகளை ஆரம்பித்தது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசியலமைப்பின் 55(5) ஆம் உறுப்புரைக்கு அமைய ஒவ்வொரு வருடமும் பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும் அரசியலமைப்புப் பேரவையின் அறிவுரைக்கு அமைய ஒவ்வொரு தவணைக்குமான முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அவ்வாறு ஒவ்வொரு தவணைக்குமான முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிக்கும் படி 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிவிக்கப்பட்டதற்கு அமைய 2016.01.01 ஆம் திகதியிலிருந்து 2016.09.30 ஆம் திகதி வரையிலான மூன்று தவணைகளினதும் முன்னேற்றம் இங்கு கூட்டாக சமர்ப்பிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்திற்கு தவணை அடிப்படையில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டியிருப்பினும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதன் முன்னேற்றம் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த அறிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன. கடந்த மூன்று தவணைகளிலும் பாரதூரமான எவ்வித தடைகளும் இன்றி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழு கூட்டங்கள்

2015.10.15 ஆம் திகதியிலிருந்து 2016.09.30 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட கூட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

2015 ஆம் வருடம் (2015.10.15 – 2015.12.31)

- 2015 ஒக்டோபர் - 04
- 2015 நவம்பர் - 10
- 2015 டிசம்பர் - 11

**மொத்தம் 25**

2016 வருடம் (2016.01.01 – 2016.09.30)

- 2016 சனவரி - 10
- 2016 பெப்ருவரி - 10
- 2016 மார்ச் - 10
- 2016 ஏப்ரல் - 08
- 2016 மே - 10
- 2016 ஜுன் - 10
- 2016 ஜுலை - 08
- 2016 ஆகஸ்ட் - 08
- 2016 செப்டம்பர் - 09

**மொத்தம் 83**

**03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மென்மேலும் வினைத்திறனாக்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சேவைப் பெறுநருக்கு வழங்கப்படும் சேவையை வினைத்திறன்மிக்க மற்றும் பயனுறுதிவாய்ந்த வகையில் நிறைவேற்றுவதற்கு இந்த காலப்பிரிவில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**i. சேவைப் பெறுநர் பட்டயமொன்றை தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்தல்.**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படும் சேவைகள், **நியமனப் பிரிவு, பதவி உயர்வுப் பிரிவு, ஒழுக்காற்றுப் பிரிவு, மேன்முறையீட்டுப் பிரிவு, தாபனப் பிரிவு, நிர்வாக மற்றும் கணக்குப் பிரிவு** என ஏழு பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவுகள் மூலம் ஆற்றப்படும் ஒவ்வொரு சேவையும் தனித்தனியாக இனம்காணப்பட்டு, அவ்வாறு இனம்காணப்பட்ட ஒவ்வொரு சேவையையும் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் சேவைப் பெறுநர் பட்டயம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு பின்வரும் வகையீட்டுக்கு அமைய பட்டயம் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. வழங்கப்படும் சேவை
2. அதற்கு தேவையான தகவல்கள்
3. ஏற்புடைய சட்டக் கோவைகள் மற்றும் கட்டளைகள் போன்றன
4. வேலைப் படிமுறைகள்
5. செலவிடப்படும் காலம்
6. ஏற்புடைய உத்தியோகத்தர்கள்

இந்த சேவைப் பெறுநர் பட்டயம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மிகவும் வினைத்திறனுள்ள வகையில் மாற்றம் அடைந்துள்ளன. மேலும் இந்த சேவைப் பெறுநர் பட்டயத்தை செயல் வடிவில் நடைமுறைப்படுத்துவதற்காக அதனை ஒழுங்கு படுத்தும் பொருட்டு அதன் காலப்பிரிவு மற்றும் நியமங்களை உள்ளடக்கி இலக்கிடப்பட்ட விசேட தின முத்திரையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**ii. இலக்கிடப்பட்ட தின முத்திரையை (Target Seal) நடைமுறைப்படுத்தல்.**

அதன் மூலம் ஒவ்வொரு செயற்பாட்டையும் மேற்கொள்வதற்கு செலவிடப்படும் மொத்த காலம் மற்றும் ஏற்புடைய செயற்பாட்டில் பங்கெடுக்கும் உத்தியோகத்தர்கள் அதற்காக செலவிடப்படும் காலம் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, ஏதேனும் செயற்பாட்டை மேற்கொள்வதில் ஏற்படும் தாமதத்திற்கு ஏற்புடைய உத்தியோகத்தர் பொறுப்பாளியாவார். இதனூடாக ஒவ்வொரு செயற்பாட்டையும் நிறைவேற்றும் போது உத்தியோகத்தர்களினால் ஏற்படும் தாமதங்கள் குறைவடைந்து வினைத்திறன் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**iii. மேலதிக செயலாளர்களின் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்.**

அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்ளோடு காணப்படும் நட்புறவையும் ஒத்துழைப்பையும் விருத்தி செய்யும் நோக்கிலும் கடமைகளை நிறைவேற்றும் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மற்றும் அவ்வந்த நிறுவனங்களினால் அடையாளம்

காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளவதன் மூலம் வினைத்திறன்மிக்க மற்றும் பயனுறுதிவாய்ந்த சேவையை வழுங்கும் பொருட்டு வருடாந்தம் சகல அமைச்சுக்களினதும் மேலதிக செயலாளர்களின் பங்கேற்புடன் வருடாந்த மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படுகின்றது. இந்த வருடத்திற்கான கூட்டம் 2016.07.22 ஆம் திகதி நடைபெற்றது.

**iv. <u>அமைச்சுக்கள் / திணைக்களங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்ட மாதிரிப் படிவங்கள்</u>**

இல 1589/30 மற்றும் 2009.02.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் தொகுதி 1 இன் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுடன் தொடர்புடைய அறிவுரைகள், தீர்மானங்கள் மற்றும் கட்டளைகள் என்பனவற்றை வேண்டிநிற்கின்ற போது அப்பணிகளை மிகவும் வினைத்திறனுள்ளதாகவும் முறையாகவும் தாமதமின்றியும் நிறைவேற்றும் நோக்குடன் அமைச்சுக்கள் / திணைக்களங்களிலிருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது அதற்கான மாதிரிப் படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது காணப்படும் மாதிரிப் படிவங்களிலுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டு புதிய மாதிரிப் படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**04. அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடனான கூட்டங்கள்**

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் எழும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வினைத்திறனுள்ள மற்றும் மிகவும் வெற்றிகரமான தீர்வுகளை அடைந்துகொள்ளும் பொருட்டு ஏற்புடைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் பின்வருமாறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

| **தொ. இல** | **திகதி** | **விடயம்** | **கலந்துகொண்ட திணைக்களம் / அமைச்சு / நிறுவனம்** |
|---|---|---|---|
| 01 | 2016.03.02 | இலங்கை புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல் | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு / புலமைச் சொத்துக்கள் அலுவலகம் |
| 02 | 2016.05.05 | வனசீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கு பதில் கடமை அடிப்படையில் வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தல் பற்றிய கலந்துரையாடல். | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு / வனப் பாதுகாப்புத் திணைக்களம் / அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு |
| 03 | 2016.06.29 | குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல். | உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அமைச்சு |
| 04 | 2016.08.26 | அஞ்சல் திணைக்களத்தின் பிரச்சினைகளை கலந்துரையாடல். | அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சு / அஞ்சல் திணைக்களம் |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **2016.09.30 ஆம் திகதியின் பின்னர் நடாத்தப்பட்ட கூட்டங்கள்** | | | |
| 05 | 2016.10.06 | நாடளாவிய சேவைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணும் பொருட்டு பொதுவான செயன்முறையொன்றை தயாரித்தல். | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு / நிதி அமைச்சு |
| 06 | 2016.10.10 | நாடளாவிய சேவைகள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகள் காணும் பொருட்டு பொதுவான செயன்முறையொன்றை தயாரித்தல். | தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்ககுழு / அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு / நிதி அமைச்சு |
| 07 | 2016.10.11 | உள்நாட்டு இறைவரிச் சேவை பிரமாணக் குறிப்பிலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல். | நிதி அமைச்சு / உள்நாட்டு இறைவரித் திணைக்களம் |
| 08 | 2016.11.01 | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களின் பதவி உயர்வுகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சு / தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் |
| 09 | 2016.11.01 | சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் மற்றும் புள்ளிவிபரவியலாளர்களின் சேவைமூப்பு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுதல். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பற்றிய அமைச்சு / தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் |
| 10 | 2016.11.02 | வனசீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பதவிகளை நிரப்புதல் பற்றிய கலந்துரையாடல். | வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு / வனப் பாதுகாப்புத் திணைக்களம் |
| 11 | 2016.11.02 | இலங்கை விவசாய சேவையின் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களினது பதவி உயர்வுகள் தொடர்பான கலந்துரையாடல். | கமத்தொழில் அமைச்சு / விவசாயத் திணைக்களம் |
| 12 | 2016.11.02 | இலங்கை வெளிநாட்டுச் சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பான கலந்துரையாடல். | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு |
| 13 | 2016.11.10 | கல்விச் சேவைக்குழு தாபிக்கப்பட்டதன் பின்னர் மேல் நடவடிக்கைகளை எடுத்தல் பற்றிய அறிவூட்டல் மற்றும் தற்போதைய முன்னேற்றத்தை வினவுதல். | கல்வி அமைச்சு |
| 14 | 2016.11.18 | மருத்துவ சேவைக்குழு தாபிக்கப்பட்டதன் பின்னர் மருத்துவ சேவையிலுள்ள பிரச்சினைகளை கலந்துரையாடுதல். | சுகாதார அமைச்சின் மருத்துவ சேவைப் பிரிவு உத்தியோகத்தர்கள் |

**05. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பிரிவுகளினது செயற்பாடுகள்**

அரசாங்க சேவை ஆணைக்குழு பின்வரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றின் மூலம் ஆற்றப்படும் செயற்பாடுகள் பின்வருமாறு.

i. **<u>தாபனப் பிரிவு</u>**

இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செய்யப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரக் கையளிப்புக்கு அமைய அரசாங்க சேவையில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல சேவைகளுக்குமென சேவைப் பிரமாணக் குறிப்பொன்றையும் அந்த சேவைகளுக்கு வெளியில் அனுமதிக்கப்பட்டுள்ள சகல பதவிகளுக்குமென ஆட்சேர்ப்புத் திட்டமொன்றையும் தயாரிப்பது தாபனப் பிரிவின் பொறுப்பாகும். அத்தகைய சேவை பிரிமாணக் குறிப்புக்களையும் ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் தாயரிக்கின்ற போது அனுமதிக்கப்பட்ட சகல பதவிகளுக்கும் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது பின்பற்ற வேண்டிய ஆட்சேர்ப்பு முறை, ஆட்சேர்ப்புத் தகைமைகள், பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம், சேவை நிபந்தனைகள், பதவி உயர்வு முறைமை மற்றும் ஏனைய சகல விபரங்களும் உள்ளடக்கப்படுகின்றன. ஏற்புடைய சேவைப் பிரமாணக் குறிப்பை அல்லது ஆட்சேரப்புத் திட்டத்தை அனுமதிப்பதற்கு முன்னர் பதவி அனுமதித்தல் தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியும் சம்பள அளவுத் திட்டம் தொடர்பாக சம்பளம் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபாரிசும் சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்தின் வரைவுக்கு தாபன பணிப்பாளரின் சிபாரிசும் பெற்றுக்கொள்ளப்படும்.

**<u>தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்.</u>**

(i) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய அதிகாரங்களை கையளித்தல் தொடர்பான நடவடிக்கைகள்.

(ii) அரசாங்க சேவையின் நடைமுறை விதிகளை அடிப்படையாகக் கொண்டு அறிவுறுத்தல் கோவைகளை தயாரித்தல்.

(iii) சகல சேவைகளுக்குமான இடமாற்ற நடைமுறைகளை தயாரித்தல் மற்றும் திருத்துதல்.

(iv) அனுமதிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பொன்றை, ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை அல்லது இடமாற்ற நடைமுறையொன்றை திருத்துவதற்கு தேவைப்படுமிடத்து ஏற்புடைய செயலாளரின் சிபாரிசின் அடிப்படையில் அந்த பிரமாணக் குறிப்பை அல்லது நடைமுறையை திருத்துதல்.

(v) அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களினால் செய்யப்படும் நியமனங்கள், பதவி உயர்வுகள் தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்களுக்கு கொள்கை ரீதியான தீர்மானங்களை வழங்குதல்.

(vi) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், இடமாற்ற நடைமுறைகள், சுற்றுநிருபங்கள் மற்றும் கட்டளைகளுக்கு அப்பாற்பட்டு செயற்பட நேரிடும் சந்தர்ப்பங்களில் அவை தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்மானங்களை வழங்குதல்.

**<u>2016.01.01 ஆம் திகதியிலிருந்து 2016.09.30 ஆம் திகதி வரை தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் விபரம்.</u>**

| | **விடயம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | புதிய ஆட்சேரப்புத் திட்டங்களை தயாரித்தலும் அனுமதித்தலும் | 64 |
| 2 | புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களை தயாரித்தலும் அனுமதித்தலும் | 1 |
| 3 | ஆட்சேர்ப்புத் திட்டங்களை திருத்துதல் | 41 |
| 4 | சேவைப் பிரமாணக் குறிப்புக்களை திருத்துதல் | 30 |

| | | |
|---|---|---|
| 5 | இடமாற்ற நடைமுறைகளை தயாரித்தலும் அனுமதித்தலும் | 10 |
| 6 | இடமாற்ற நடைமுறைகளை திருத்துதல் | 7 |
| 7 | ஆட்சேர்ப்புத் திட்டங்கள் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் திருத்தங்களை செய்தல். | 8 |
| 8 | அ.சே.ஆ. சுற்றுநிருபங்களை வெளியிடல் | 4 |
| 9 | விசேட சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்களுக்கு அனுமதியை வழங்குதல் | 16 |
| 10 | விசேட சந்தர்ப்பங்களில் சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்காக முன்வைக்கப்படும் வேண்டுகோள்களுக்கு அனுமதியை வழங்குதல் | 10 |
| 11 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்புடைய விடயங்கள் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்குதல் | 1 |
| 12 | கொள்கை ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல் | 100 |
| 13 | பொது விடயங்கள் தொடர்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல் | 77 |
| 14 | உயர் நீதிமன்றம், நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை, மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள். | 54 |
| | **மொத்தம்** | **423** |

**மீளாய்வுக்குரிய வருடத்திற்குள் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்.**

**நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்**

| 2015.12.31 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவை | 2016 ஆண்டில் கிடைக்கப்பெற்றவை | 2016.09.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கை | அ.சே.ஆ. தீர்மானங்கள் உறுதிப்படுத்தப்பட்டவை | அ.சே.ஆ. தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டவை | 2016.09.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவை |
|---|---|---|---|---|---|
| 16 | 10 | 26 | 2 | 1 | 23 |

**உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

| 2015.12.31 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவை | 2016 ஆண்டில் கிடைக்கப்பெற்றவை | 2016.09.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அ.சே.ஆ. தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக் | உயர் நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் இரத்துச் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2016.09.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவை |
|---|---|---|---|---|---|
| 60 | 12 | 72 | 6 | 0 | 66 |

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

| 2015.12.31 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவை | 2016 ஆண்டில் கிடைக்கப்பெற்றவை | 2016.09.30 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் உறுதிப்படுத்தப்பட்டவை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அ.சே.ஆ. தீர்மானங்கள் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் நிவாரணங்கள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2016.09.30 ஆம் திகதிக்கு நிறைவு பெறாதவை |
|---|---|---|---|---|---|
| 5 | 5 | 10 | 0 | 0 | 10 |

- நிர்வாக விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்ஸ்மன்), மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மற்றும் பொது மனுக்குழுவுக்கு மீளாய்வுக்குரிய காலப்பிரிவில் முறைப்பாடுகள் முன்வைக்கப்படவில்லை.

**ii. நியமனப் பிரிவு**

இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரசாங்க சேவை மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) நியமனங்கள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் நியமனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு, சேவை நிரந்தரமாக்கல், சேவை முடிவுறுத்தல், முன்னர் வகித்த பதவிக்கு மீள அனுப்புதல், பதில் கடமை / கடமை நிறைவேற்றல் அடிப்படையிலான நியமனம், விடுவித்தல் (நிரந்தர / தற்காலிக), ஒப்பந்த அடிப்படையிலான நியமனம், பதவி விலகல், சேவைக்கு / பதவிக்கு மீண்டும் நியமித்தல், ஓய்வு பெறச்செய்தல் (அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 30/88 பிரகாரம், விருப்ப, கட்டாய, மருத்துவ காரணிகள் மீது) ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள நியமித்தல். சேவைப் பிரமாணக் குறிப்புக்களிலுள்ள அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகள் / தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் மனுக்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

| | நியமனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2016.01.01 – 2016.09.30) | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓய்வு பெறுகை | 619 |
| 2 | நிரந்தரமாக்கல் | 1406 |
| 3 | ஆட்சேர்ப்பு | 1625 |
| 4 | ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தல் | 570 |
| 5 | ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் | 19 |
| 6 | வினைத்திறன்காண் தடைதாண்டல் தொடர்பான தீர்மானங்கள் | 933 |
| 7 | பதில் கடமை / கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமித்தல் | 747 |
| 8 | விடுவித்தல் | 107 |
| 9 | பதவி விலகல் | 13 |
| 10 | உள்ளீர்ப்புச் செய்தல் | 72 |
| | **மொத்தம்** | **6111** |

2015.12.31 ஆம் திகதிக்கு பிரிவினால் தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றில் 2016.09.30 ஆம் திகதியன்று நிறைவுபெற்றுள்ள வழக்குகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை.

**<u>உயர் நீதிமன்ற வழக்குகள்</u>**

| | 2015.12.31 ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2016 வருடத்தில் நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2016 ஆம் வருடத்திற்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 28 | 05 |
| 2016 ஆம் வருடத்தில் தொடுக்கப்பட்டவை | 06 | 02 |

**<u>மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்</u>**

| | 2015.12.31 ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2016 வருடத்தில் நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2016 ஆம் வருடத்திற்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 10 | 00 |
| 2016 ஆம் வருடத்தில் தொடுக்கப்பட்டவை | 02 | 00 |

**<u>நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்</u>**

| | 2015.12.31 ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2016 வருடத்தில் நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2016 ஆம் வருடத்திற்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 83 | 28 |
| 2016 ஆம் வருடத்தில் தொடுக்கப்பட்டவை | 25 | 01 |

மேலுள்ள வழக்குகள் மற்றும் மேன்முறையீடுகளுக்கு மேலதிகமாக 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2016.09.30 திகதி வரையிலான காலப்பகுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 18 முறைப்பாடுகள் மற்றும் பொது மனுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 முறைப்பாடுகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**iii. பதவி உயர்வுப் பிரிவு**

இல 1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களின் (அமைச்சு செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரசாங்க சேவை மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) பதவி உயர்வுகள் தொடர்பிலான பின்வரும் செயற்பாடுகள் பதவி உயர்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்கள் / பதவி உயர்வுத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப பதவி உயர்வு வழங்குதல் (ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு / சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில்), பதவிகளுக்கு நியமித்தல் (சேவை மூப்பு / கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் கட்டளைகள் / தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்படும் மேன்முறையீடுகள் மற்றும் உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் மனுக்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

| | **பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2016.01.01 – 2016.09.30)** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவி உயர்வு | 3404 |
| 2 | தேர்வு அடிப்படையிலான பதவி உயர்வு | 412 |
| 3 | பதவிகளுக்கு நியமித்தல் | 335 |
| | **மொத்தம்** | **4151** |

2015.12.31 ஆம் திகதிக்கு பிரிவினால் தோற்றுவதற்கு எஞ்சியிருந்த வழக்குகள் மற்றும் முறைப்பாடுகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றில் 2016.09.30 ஆம் திகதியன்று நிறைவுபெற்றுள்ள வழக்குகள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை.

**உயர் நீதிமன்ற வழக்குகள்**

| | 2015.12.31 ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2016 வருடத்தில் நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2016 ஆம் வருடத்திற்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 26 | 03 |
| 2016 ஆம் வருடத்தில் தொடுக்கப்பட்டவை | 10 | 00 |

**மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்**

| | 2015.12.31 ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2016 வருடத்தில் நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2016 ஆம் வருடத்திற்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 03 | 00 |
| 2016 ஆம் வருடத்தில் தொடுக்கப்பட்டவை | 01 | 00 |

**நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்**

| | 2015.12.31 ஆம் திகதிக்கு எஞ்சியிருந்த எண்ணிக்கை | 2016 வருடத்தில் நிறைவடைந்தவை |
|---|---|---|
| 2016 ஆம் வருடத்திற்கு முன்னர் தொடுக்கப்பட்டவை | 81 | 08 |
| 2016 ஆம் வருடத்தில் தொடுக்கப்பட்டவை | 05 | 01 |

மேலுள்ள வழக்குகள் மற்றும் மேன்முறையீடுகளுக்கு மேலதிகமாக 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2016.09.30 திகதி வரையிலான காலப்பகுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 முறைப்பாடுகள் மற்றும் பொது மனுக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 முறைப்பாடுகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**iv ஒழுக்காற்றுப் பிரிவு**

நாடு முழுவதற்குமான சேவைகளைச் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல 6/2006 இல் MN-7 மற்றும் அதற்கு மேலான சம்பள அளவுத்திட்டங்களை உடைய உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்கு ஏற்புடைய ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள மேற்படி அதிகாரங்களின் பிரகாரம் அவ்வந்த சந்தர்ப்பங்களில் தேவையான கட்டளைகளை வழங்குவதற்காக ஒழுக்காற்றுப் பிரிவினால் ஆணைக்குழுவுக்கு தேவையான அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகள் வழங்கப்படுகின்றன.

**ஒழுக்காற்றுப் பிரிவின் செயற்பாடுகள்**

திணைக்களத் தலைவர்கள் ஊடாகவோ அல்லது அமைச்சு செயலாளர்களினாலோ மேற்கொள்ளப்படும் ஆரம்ப விசாரணைகளுக்கு ஏற்புடைய நாடுமுழுவதற்குமான சேவைகளுக்குரிய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல 1733/52 மற்றும் 2011.11.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வருகின்ற உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**2016.01.01 ஆம் திகதி முதல் 2016.09.30 ஆம் திகதி வரையில் ஒழுக்காற்றுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரம்**

| தொ. இல | விடயம் | வழங்கப்பட்ட கட்டளைகளின் எண்ணிக்கை 2016.01.01 தொடக்கம் 2016.09.30 வரை |
|---|---|---|
| 01 | குற்றப்பத்திரங்கள் வழங்குதல் | 77 |
| 02 | குற்றப்பத்திரங்களை திருத்துதல் | 18 |
| 03 | குற்றங்களிலிருந்து விடுவித்தல் | 50 |
| 04 | பதவி நீக்கம் செய்தல் | 03 |
| 05 | ஏனைய ஒழுக்காற்றுத் தண்டனைகள் | 56 |
| 06 | மீண்டும் சேவையில் அமர்த்தல் | 26 |
| 07 | மேன்முறையீடுகளை நிராகரித்தல் | 13 |

| | | |
|---|---|---|
| 08 | ஓ.பி.கு. 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறச்செய்தல் | 12 |
| 09 | கட்டாய லீவில் அனுப்புதல் | 04 |
| 10 | கட்டாயமாக ஓய்வுபெறச் செய்தல் | 01 |
| 11 | பணித்தடை செய்தல் | 08 |
| 12 | ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை நியமித்தல் | 93 |
| 13 | ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக செய்யப்பட் ஓய்வுபெறுகையை சாதாரண ஓய்வு பெறுகையாக மாற்றுதல் | 11 |
| 14 | சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்தல் | 03 |
| 15 | ஒழுக்காற்று நடவடிக்கைகளை நிறைவுசெய்தல் | 47 |
| 16 | ஏனைய பொதுவான கட்டளைகள் | 286 |
| 17 | AAT மேன்முறையீடுகளுக்கான அவதானிப்புரைகள் | 34 |
| 18 | மேன்முறையீட்டு விண்ணப்பங்களுக்கான அவதானிப்புரைகள் | 07 |
| | **மொத்தம்** | **749** |

**மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்**

| | **உயர் நீதிமன்றத்தின் விண்ணப்பங்கள்** | **மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விண்ணப்பங்கள்** | **நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையின் மேன்முறையீடுகள்** |
|---|---|---|---|
| 2015.12.31 ஆம் திகதியன்று தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 31 | 20 | 122 |
| 2015.12.31 ஆம் திகதியன்று எஞ்சியிருந்த எண்ணிக்கையில் 2016.09.30 ஆம் திகதியன்று நிறைவடைந்துள்ள வழக்குகள் | 26 | 14 | 23 |
| 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2016.09.30 ஆம் திகதி வரை புதிதாக தொடுக்கப்பட்ட வழக்குகள் | 05 | 03 | 17 |
| 2016.09.30 ஆம் திகதி நடவடிக்கை எடுப்பதற்கு எஞ்சியுள்ள வழக்குகள் | 10 | 09 | 116 |

**v. <u>மேன்முறையீட்டுப் பிரிவு</u>**

1. அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரைக்கு அமைவாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம், பதவிஉயர்வு, இடமாற்றம், அவர்கள் தொடர்பிலான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்யும் அதிகாரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க (அதி விசேட) வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கையளிக்கப்பட்டுள்ளன.

   i. 2011.11.25 ஆம் திகதிய 1733/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்.

   ii. 2016.02.25 ஆம் திகதிய 1955/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட 2015.11.20 ஆம் திகதிய 1941/41 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்.

2. அவ்வாறு அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் வழங்கப்படும் கட்டளையினால் அதிருப்திக்குள்ளாகும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியலமைப்பின் 58 (1) உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு எழுத்துமூல மேன்முறையீடொன்றை செய்வதற்கு முடியும்.

3. மேற்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்படும் மேன்றையீடுகள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் மேன்முறையீட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

   i. ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடைய அமைச்சு / திணைக்களிலிருந்து அவதானிப்புக்கள் மற்றும சிபாரிசுகள் அடங்கிய அறிக்கைகளை கோறுதல்.

   ii. அதன் பின்னர் ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் விரிவான அறிக்கையொன்றை தயாரித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல்.

   iii. மேன்முறையீடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களை மேன்முறையீட்டாளருக்கும் ஏனைய தரப்பினருக்கும் அறிவித்தல்.

   iv. மேன்முறையீடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தீர்மானங்களுக்கு எதிராக நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு முன்வைக்கும் மேன்முறையீடுகள் தொடர்பில் அவதானிப்புரைகளை தயாரித்தல் மற்றும் அந்த மேன்முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு சார்பில் அந்த நியாய சபையின் முன் தோன்றுதல்.

   v. பொது மனுக்குழுவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அக்குழுவின் முன் தோற்றுதல்.

   vi. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்குகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அவதானிப்புக்கள் / சிபாரிசுகளை முன்வைத்தல்.

**2016.01.01 ஆம் திகதி முதல் 2016.09.30 ஆம் திகதி வரையில் மேன்முறையீட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விபரம்.**

| தொ.இல | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2016.01.01 ஆம் திகதி முதல் 2016.09.30 ஆம் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் | 685 |
| 2 | முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக 2016.09.30 ஆம் திகதிக்கு அறிக்கைகள் கிடைக்கப்பெறாத மேன்முறையீடுகள் | 456 |
| 3 | 2016.01.01 ஆம் திகதி முதல் 2016.09.30 ஆம் திகதி வரையில் அறிக்கைகள் கிடைக்கப்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் மேன்முறையீடுகள் | 168 |
| 4 | 2016.01.01 ஆம் திகதி முதல் 2016.09.30 ஆம் திகதி வரையில் நிறைவு செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 868 |
| 5 | முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக 2016.09.30 ஆம் திகதிக்கு நடைமுறையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | 30 |
| 6 | முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக 2016.09.30 ஆம் திகதிக்கு நடைமுறையிலுள்ள நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபை வழக்குகளின் எண்ணிக்கை | 191 |
| 7 | முன்னைய வருடங்களும் உள்ளடங்களாக 2016.09.30 ஆம் திகதிக்கு நடைமுறையிலுள்ள பொது மனுக்குழுவின் விசாரணைகளின் எண்ணிக்கை | 07 |

**மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய விபரம்**

| விபரம் | 2015.12.31 ஆம் திகதிக்கு இருந்த வழக்குகள் | 2015.12.31 ஆம் திகதியிலிருந்து 2016.09.30 ஆம் திகதி வரை புதிதாக கிடைக்கப்பெற்றவை | 2015.12.31 ஆம் திகதியிலிருந்து 2016.09.30 ஆம் திகதி வரை நிறைவு செய்யப்பட்டவை | 2016.09.30 ஆம் திகதிக்கு உள்ளவை |
|---|---|---|---|---|
| உயர் நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | 24 | 8 | 5 | 27 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை | 02 | 01 | 00 | 03 |
| நிர்வாக மேன்முறையீட்டு நியாய சபையில் விசாரணையிலுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 187 | 49 | 45 | 191 |

| | |
|---|---|
| 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2015.12.31 ஆம் திகதி வரை தோற்றிய பொது மனுக்குழு விசாரணைகளின் எண்ணிக்கை } | 49 |
| 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் 2016.09.30 ஆம் திகதி வரை தோற்றிய பொது மனுக்குழு விசாரணைகளின் எண்ணிக்கை } | 07 |

--------------------------------//-----------------------------